1971 ஜூலை 12]

திரு. ஜே. ஜேம்ஸ் : நெரிசல் வேளைகளில் பஸ்களில் சாதாரணமாக பிரயாணிகள் ஏறும்போது ஏறி நிற்கிறவர்கள் அசைவதற்குக்கூட வழி இல்லாமல் ஏற்றப்படுகிறார்கள். இதனால் பிரயாணிகளுக்கு டிக்கட் வழங்குவதற்குக் கூட சவுகரியம் இல்லாமல் இருப்பதால் அரசாங்கத்திற்கு நஷ்டம் வருகிறது. ஆகவே இந்த நிலையைப் போக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஏறி நிற்பதற்குக் கூடச் சவுகரியம் இல்லாமல் இருப்பதால்தான் அதை நெரிசல் நேரம் என்று சொல்லுகிறோம். அவர்களுக்கு வசதி செய்வதற்காகத்தான் ஸ்டாண்ட் கண்டக்டர்ஸ், ஒரு பஸ்ஸில் இரண்டு கண்டக்டர்கள் போடுவது, க்யூ சிஸ்டத்தைக் கொண்டு வருவது போன்ற நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : மீண்டும் இப்போது இந்திரா நகர், சாஸ்திரி நகருக்கு பஸ் வசதிகள் போதவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, அங்கு அதிகமான பஸ்களை விட அரசாங்கம் முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போதுதான் கூறியுள்ளார்கள். அதிகப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை எதுவும் வந்ததாகத் தெரியவில்லை.

கோயில்களில் தமிழில் அர்ச்சனை முறை

* 207 வினா—திரு. மா. பா. சாரதி :

திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தற்சமயம் எத்தனை கோயில்களில் தமிழில் அர்ச்சனை முறை பின்பற்றப்படுகிறது ?

(இ) இம்முறையை எல்லா கோயில்களுக்கும் நீட்டிக்க அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) 112 கோயில்களில் தமிழ் அர்ச்சனை பின்பற்றப்படுகிறது.

(இ) சுமார் 15—8—1971 தேதிக்குள் எல்லா ஆலயங்களிலும் திருமுறைத் தமிழில் அர்ச்சனை துவங்கப்பட வேண்டுமென்று இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் அறிவுரை வழங்கியுள்ளார் மேலும் குறிப்பாக இதன் முன்னேற்றத்தை கவனிக்குமாறு துணை ஆணையர்களையும் உதவி ஆணையர்களையும் பணித்துள்ளார்.

திரு. ச. சங்குமுத்து தேவர்: தமிழ் நாட்டில் மொத்தம் எத்தனை கோயில்கள் இருக்கின்றன ? மற்றக் கோயில்களில் தமிழில் அர்ச்சனை எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பொதுப்படையான கேள்வி. திரு. மாணிக்கவாசகம். . . .

திரு. இரா. மாணிக்கவாசகம்: தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதற்குத் தமிழர்களிடத்தில் இருந்து எதிர்ப்பு வந்திருக்கிறதா ?

[1971 ஜூலை 12

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தமிழில் அர்ச்சனை செய்வதைத் தமிழ்ச் சமுதாயம் வரவேற்கிறது. ஆனால் தமிழர் மத்தியில் சிலபேர் தமிழ் அர்ச்சனையை எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இறைவன்தான் நல்லறிவு வழங்க வேண்டும்.

திரு. எஸ். ஆறுமுகம் : தமிழில் அர்ச்சனை செய்வதற்கு எந்த மதத்தினராக இருந்தாலும் தமிழ் அர்ச்சனை தெரிந்தவர்களாக இருந்து முன்னுக்கு வந்தால் அவர்களை நியமிக்க அரசாங்கம் முன் வருமா? குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்தவர்தான் அர்ச்சனை செய்ய வேண்டுமென்று விதி இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அர்ச்சனைகள் இந்து மதத்தைச் சார்ந்த கோயில்களில்தான் நடக்கின்றன. ஆகவே, இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள்தான் அர்ச்சனை செய்வதற்கு நியமிக்கப்படுவார்கள்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தமிழில் கோயில்களில் அர்ச்சனை செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். தமிழில் அர்ச்சனை செய்யும்போது ஏற்கனவே இருந்த சமஸ்கிருதத்தைத் தமிழில் மொழி பெயர்த்துச் செய்கிறார்களா அல்லது தமிழில் அர்ச்சனை செய்ய தனிப்பட்ட சுலோகங்கள் இருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தமிழில் அர்ச்சனை செய்வதற்குப் புதிதாகத் தமிழ்த் திருமுறைகள் இயற்றப்பட்டுள்ளன. தமிழ் மேதைகள் புதிய திருமுறைகளை கோயில்களுக்கு அறநிலையத் துறையின் மூலம் வழங்கி இருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கோயிலுக்குச் செல்லுகின்ற பக்தர்கள் விருப்பம் போல் எந்த மொழியில் வேண்டுமானாலும் அர்ச்சனை செய்ய அனுமதிக்கப்படுமா? அல்லது தமிழில்தான் அர்ச்சனை செய்ய வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கட்டாயம் எதுவும் கிடையாது. சமஸ்கிருதத்தில் அர்ச்சனை செய்யப்பட்டபோது தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும் என்ற நிலை இருந்தது; இப்போது தமிழில் அர்ச்சனை செய்யப்படுகின்ற நிலையில் சமஸ்கிருதத்திலும் அர்ச்சனை செய்யப்படும் என்ற நிலை உருவாகியிருக்கிறது. யாரையும் கட்டாயப்படுத்தவில்லை. தமிழ் உணர்ச்சி உள்ளவர்கள் தமிழில்தான் அர்ச்சனை செய்ய வேண்டுமென்று ஆலயங்களில் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதன்படி இன்றையதினம் செய்யப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'அறிவுரை கூறப்பட்டிருக்கிறது' என்று சொன்னார்களே தவிர, 'ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது' என்று கூறவில்லை.

திரு. மா. சுப்பிரமணியம் : சமஸ்கிருதத்தில்தான் அர்ச்சனை செய்ய வேண்டுமென்று அரசுக்கு ஆண்டவன் ஆணை ஏதும் பிறப்பித்திருக்கிறாரா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : சமஸ்கிருதத்தில்தான் அர்ச்சனை செய்யவேண்டுமென்று ஆண்டவன் கேட்கவில்லை. ஆனால் தமிழ் உணர்ச்சியுள்ள ஆண்டவன் தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டுமென்ற எண்ணத்தைத் தமிழ்ச் சமுதாயத்திற்கு இன்றையதினம் கொடுத்திருக்கிறான்.

1971 ஜூலை 12]

திரு. மு. பழனிவேலன் : தமிழில் அர்ச்சனை செய்ய வேறு ஜாதியினர் முன்வந்தால் அரசாங்கம் அதற்கு அனுமதி அளிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இதிலே ஜாதிபேதம் எதுவும் கிடையாது. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அர்ச்சகர்களாக நியமிக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, now that these questions have been asked here, will you protect us, credulous people like me, from all solts of ironies spoken about God in this Assembly? We are all credulous people and not as radical as anybody else. The question is asked whether God has asked for Sanskrit Archanas. It is obvious that God will never ask for Sanskrit Archanas. During the last few days we have submitted ourselves to all sorts of questions in this House and such passive people like me should be protected only by the Speaker.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆண்டவன் மனித உருவிலும் வந்திருக்கிறான். ஆண்டவனுக்கு அவமானம் ஏற்பட்டு விட்டதாகவோ, பரிகாசம் செய்யப்பட்டு விட்டதாகவோ கருத வேண்டாம். அப்படிப்பட்ட சொற்கள் உச்சரிக்கப்படுவதாகத் தாங்கள் கருதிக்கொள்ளத் தேவையில்லை.

திரு. கே. எம். சுப்பிரமணியம் : மனிதனை அவமானப்படுத்தினால் ஆண்டவனை அவமானப்படுத்தியதாக அர்த்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆண்டவனுக்கு எந்த விதமான அவமானமும் ஏற்பட்டு விடவில்லை. அப்படி அவமானம் ஏற்படுவதை இந்த அவை அனுமதிக்காது. கேட்ட கேள்விகள் எல்லாம் ஆண்டவன் கேட்டு இருக்கிறாரா என்பதுதான். ஆண்டவன் எந்த ரூபத்தில் வேண்டுமானாலும் இருக்கலாம், உங்களைவிட பக்தியாக அவர்கள் இருக்கலாம்.

திரு. கே. எம். சுப்பிரமணியம் : தாங்க் யூ சார்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, இந்த மன்றத்தின் முன்னாள் உறுப்பினர் திரு. மா. பொ. சி. அவர்கள் தேர்தல் காலத்தில் ஒரு கோவிலில் அர்ச்சனை செய்யச் சென்றார். அங்கே சமஸ்கிருதத்தில் அர்ச்சனை செய்த போது தேர்தலில் தோற்று விடுவார்கள் என்று ஒரு அர்ச்சகர் சொன்னாராம். அந்த அர்ச்சகர் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை.)

வெள்ளிக்குறியிடாத வினாக்கள்.

மதுவிலக்கு வழக்குகள்.

1 வினா—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969–70-ம் ஆண்டில் தமிழ்நாட்டில் மதுவிலக்கு சம்பந்தமாக போலீஸார் எத்தனை கேஸ்கள் போட்டிருக்கிறார்கள் ?

(இ) அவைகளில் தண்டனை கிடைத்த கேஸ்கள் எத்தனை ?

விடை—

(அ) 3,32,539.

(இ) 2,81,227.